Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

ஸ்தாபிதம் (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூகூ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஹூ தை மீ கஅ௳ வெள்ளிக்கிழமை (31 JAN 1958) [இல-சுக]

அரசியல் அலை

## ஒருபக்கத்தாரே தீர்ப்புக்கூறி உள்ளம் திருப்திப்படல்!

### பிரதமர் எண்ணத்தில் மொழிப்பிணக்கு இல்லையாம்!!

சொல்லுவார் சொன்னலும் கேட்போருக்கு.............?

இல்ங்கைக் கிராமச்சங்க மகாநாடு என்று ஒன்று உண்டு. இது ஆண்டுககாண்டு கூடுவது. எப்பொழுதும் இதற்குத் தலைமை வகிப்பவர் திரு பண்டாரநாயகவே. இதற்கு இவருக்குரிய உரிமை என்ன என்று பலர் ஆட்சேபனை செய்வார்கள். ஆனுல் எங்கள் பிரதமர் அரசியல் வாழ்க்கையைக் கிராமச்சங்க அங்கத்தவராகவே ஆரம்பித்தவர் என்பது குறிப்பிடப்படவேண்டிய தொன்று. அது பழங் காலம் அல்லவா என்றுல் அதன்பின் அவர் உள்ளூர் ஆட்சிப்பகுதி மந்திரியாராக இருந்தவர் என்ற உரிமை இருந்தது. அப்பால் எப்படியென்று யாராவது வினவினுல் அவர் பிரதமராக இருக்கின்ருரல்லவா என்பதே சமாதானம்.

தொழிற் கட்சிகளுக்கு தொழிலாளிகளல்லாத முதலாளிகள் தலைவர்களாயிருத்தல் சாதாரணமாகும். இந்த நாட்டிலே பிரதமர் ஏன் கிராமச் சங்க மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கக் கூடாது?

அது எவ்வாற்ருயினும் ஆகட்டும். அந்த மகாநாட்டிலே அதைவிட அதிசயமான புதினமொன்றைப் பிரதமர் அறிவித்திருக்கிருர் என்பதைஎண்ண அதிசயம் ஆச்சரியமாகி விட்டது.

ஈழநாட்டு மொழிப் பிணக்கு திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டதாம். இது பிரதமர் சொல்லியது. சிங்கள மக்களுக்குத் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டதை யார் மறுக்கிருர்கள், சிங்கள மக்களின் திருப்தி இலங்கை மக்களின் திருப்தி என்று பிரதமர் எண்ணியிருப்பதையும் யார் ஆட்சேபிக்க முடியும். அவ்வளவில் நின்றுவிடவில்லை. தனிச் சிங்களமே இலங்கையின் அரச கரும மொழியென்பது ஐயமின்றித் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்று விளக்கங் கூறிப் பிரதமர் மறுபடியும் மொழிப் பிணக்குத் தீர்ந்து விட்டதாக மொழிந்திருக்கின்ருர்.

பேச்சுத் தொடர்ந்து போகும்பொழுது பிரதேச சபையைப் பற்றியும் பிரதமர் விளக்கி ஒப்பந்தத்தின் உண்மையைச் சிறிது வெளிப்படுத்தி விட்டார். மத்திய அரசாங்கத்தில்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## பாரத நாட்டின் பண்புமிக்க சால்பு

### பல இனக் கூட்டத்திற் பரந்து வளரும் நல் ஆட்சி

தை (ஆங்கில)க் கடைசி வாரம் பாரத நாட்டின் வரலாற்றிலே தனிக் குறிப்பு வாய்ந்திருக்கின்றது. பல நூற்றுண்டுகளாகப் புற நாட்டாட்சியி லடிமைப்பட்ட இந்திய தேச விடுதலைத் தினம் இருபத்தாரும் நாள் இது பெருமைக்கும் பெருமகிழ்ச்சிக்குமுரிய நன்னுள். ஆனுல் நான்கு நாட்களுக்குப் பின் தை முப்பது ஆற்ளுத் துயரத்தை அகில உலகுக்கும் கொடுத்த தினமாகும். உலக அரசியல் வானத்தில் உண்மை ஒளி பரப்பிய பாரத நட்சத்திரம் மறைந்த நாள். அந்த மறைவைச் சிந்தைசெய்வதனுல் அந்த ஞான ஒளியின் வெளிச்சம் மக்கள் அகத்தில் வீசிக்கொண்டிருக்கின்றது.

என்றும் புகழுக்குரிய இந்திய நாட்டின் வரலாற்றை உலகத்துப் பெருங் கீர்த்தி வாய்ந்த அரசியல் நிபுணர்கள் மனிதப்பண் பாட்டுக்கு ஒரு எடுத்துக் காட்டாக மதிக்கின்ருர்கள். இராமாயண காலம் பாரத காலம் என்று தொன்றுதொட்டுப் பாராட்டப்படும் பண்பாட்டைப்பற்றி வாயாரப் புகழ்ந்து வந்தவர்கள் தொடர்ச்சியாகப் பாரத நாட்டின் பண்பாடு வளர்ச்சியுற்று வருவதைக் கண்டு அதை ஒரு தனிமதிப்புடன் பின்பற்றவும் எண்ணினுர்கள்.

இடைக்காலத்தில் சமய வளர்ச்சிக்குரிய நாயன்மார்களின் அதியற்புத சால்பைப்பற்றி இங்கே குறிப்பிட வேண்டியதில்லை. அரசியல் நோக்கத்தை அறத்துடன் ஈடுபடுத்தி நன்னெறி வாழ்க்கையை மக்கள் உணர்ந்து வாழ்வதற்கு வழிகாட்டியாக வந்துதித்த காந்திப் பெரியாரின் காலத்தை இங்கு நினைவுக்கழைப்பது இக்கட்டுரைக்குப் பொருத்தமாகும்.

ஐம்பத்தாறு தேசத்து அரசர்கள் என்று வரலாறு கூறும் மதிப்புக்குரிய பாரத நாடு ஒரு பரந்த உபகண்டமாயிருக்கின்றதென்ற உண்மையை முதற்கண் உணர்ந்துகொண்டு இந்திய அரசியல் அமைப்பை ஆராய்ந்துபார்த்தால் அந்த அமைப்பின் அணியும் முறையும் நன்கு புலப்படும்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# மொழிப்பிணக்கு முற்றுகத் தீர்க்கப்பட்டது -

—பிரதமர்

# சிங்களத்தில் நீதிமன்ற வேலைத்திட்டம் ஆயத்தம்-

—நீதிமந்திரி

## முரண்பட மொழிந்து ஒப்பந்தத்தையும் ஒதுக்குகிருர்களா?

வெள்ளத்தால் நன்மையும் விளைந்தது என்பது தான் ம. ஐ. மு. ஆட்சியாளர்களின் கருத்து. மக்கள் படும் துயரத்தில் மொழியைப்பற்றியும் எண்ணுவார்களா என்று மந்திரிமார் எண்ணிவிட்டார்கள். ஊக்கம் கொண்டு பழையபடி தனிச்சிங்களத்தை உறுதிப்படுத்துவதற்குஉழைக்கின்ருர்கள் மந்திரிமார்களும்உத்தியோகத்தர்களும். ஆனுல் ஊரிலே கதை உலாவுவதற்கும் தடையில்லை. மொழிச் சமாதானச் சட்டத்திருத்தமும் பிரதேசசபை அமைப்புத் திட்டமும் **விரைவில் வெளிவரும் என்ருற் போதாதா?**

### மாத்தளையில் வாக்குவாதம்

மாத்தளை மகாண அதிபதி ஒரு தமிழர். திரு. அ. இரத்தினம் அவர்கள். அப்பிரிவுக் காரிய இணைப்புச் சபைக் கூட்டத்தில் (District Co-ordinating Committee) நிகழ்ச்சிகளைச் சிங்களத்தில் நடத்த வேண்டுமென்று கிராமச் சங்கத் தலைவர் ஒருவர் கேட்டுக் கொண்டார். மாகாண அதிபதி அவ்வாறு செய்வது வேலை ஒழுங்குக்கு வசதியாயிருக்கமாட்டாதுஎன்று நடைமுறை ஒழுங்குகளைப் பற்றி விரித்துக் கூறியும் அந்தக் கிராமச் சங்கத் தலைவர் உடன்படாது நிற்கவே அப்பிரேரணை பெரும்பான்மை வாக்குகளாலே தோற்கடிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து மாத்தளைத் தொகுதிப் பாராளுமன்றத்து அங்கத்தவரும் தம்புலத் தொகுதி அங்கத்தவரும் மாகாண அதிபதியுடன் வாக்குவாதம் தொடுத்து நிகழ்ச்சிகள் சிங்களத்திலே நடைபெறுதல் வேண்டுமென்பதுதான் அரசாங்க முடிபு என்று கூறினுர்களாம்.

**மொழிப் பிணக்கு முற்றுய்த் தீர்க்கப்பட்டதன் முதல் எதிரொலி!**

### நீதி மந்திரியும் நிலைநாட்டுவாராம்!

நீதிமன்றங்களிலே நிகழ்ச்சிகள் சிங்களத்தில் நடைபெறுவதற்காக ஒரு சட்ட ஒழுங்கு இயற்றுகின்ருராம் நீதிமந்திரியார். ஆங்கிலத்[illegible]ளம் உபயோகிக்கப்படுவதற்கு ஒரு சட்ட திட்டம் கொண்டு வரப்படுமாம். தமிழ் பேசும் மக்கள் தலைகுனிந்து மௌனமாயிருப்பதற்காகவும் ஒரு ஏற்பாடு நடைபெறுகின்றதாம் இந்தத் தனிச்சிங்கள ஒழுங்கு எல்லா நீதிமன்றங்களிலும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படாதாம். குறிக்கப்பட்ட மன்றங்களிலே நீதி மந்திரியால் உபயோகிக்கும்படி உத்தரவிடப்படுமாம்!

**மொழிப் பிணக்கு முற்றுய் முடிந்துவிட்டதன் முக்கியமான எதிரொலி!!**

### அறிக்கைகளும் அயல்மொழியிற்ருனும்

அரசாங்கப் பகுதிகளின் பரிபாலன ஆண்டு அறிக்கைகள் (Administration Reports) ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தமிழிலும் அச்சிடப்பெற்று வந்தன ஆனுல் அரச கருமமொழி ஆணையாளரின் கட்டளைப்படி இந்த அறிக்கைகள் சிங்களத்தில் அச்சிடப்பெறுமாம். அவற்றின் சாராம்சம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுமாம். அரசாங்கவர்த்தமானப்பத்திரிகையில் தொழிற்பகுதி வெளியீடும் சிங்களத்திலேயே இருக்குமாம். சாராம்சம் தமிழிலும் ஆங்கிலத்

## முத்துக் குளிப்பு

மன்னுருக்கும் புத்தளத்துக்கும் இடைப்பட்ட கடலில் முத்துக் குளிக்கப்படும். முன்னை நாளில் நடந்தவாறே முத்துச் சிற்பிகள் ஏலத்தில் விற்கப்பெறும். 9000000 சிப்பி வரையில் அகப்படும்என்று மதிக்கப்பட்டிருக்கிறது. ஐம்பதுக்கு ஒன்றில் நன்முத்து உண்டென எண்ணப்படுகின்றது.

—தாராள மனப்பான்மைச் சான்று வேறு வேண்டுமா?

**மொழிப் பிணக்கு என்று ஒன்றுஉண்டு என்பதின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

—0—

தைத் திங்கள் 21-ம் நாள் ஆகிய(3-2-58) திங்கட்கிழமை தைப் பூசத் திருநாளின் பொருட்டு, சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத் தருகின்றேம்.

அதிபர்

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞு தை மீ
கஅ வ வெள்ளிக்கிழமை


## தயவில் வாழ்கின்றூர்களா தமிழ் பேசும் மக்கள்?

—o—

கட்சிவெறி பிடித்தவர் எல்லாவற்றிலும் எப்பொழுதும் கட்சிச் சின்னத்தைப் பொறிப்பதுபோலப் பண்டாரநாயக ஆட்சியாளர்களும் 'தனிச்சிங்கள'த் தலை மயக்கத்தாலே தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படும் அரிசி அளவுப் பங்கீட்டுப் புத்தகங்களிற் கூடச் சிங்களத்தைப் புகுத்தியிருப்பதைக் கண்ட பின்பும் சமரசப் பேச்சுகள் சமாதான முடிபுகள் மொழிப் பிணக்கைத் திர்த்துவிட்டன வென்று சொலலப்படுவதை யாராவது நம்புவார்களா?

தொட்டதெல்லாவற்றிற்கும் முதலாளிக்கு முறையிடவேண்டிய அவமான அலங்கோல நிலையிலே தமிழ்பேசும் மக்கள் தாழ்த்தப்பட்டிருக்கிறூர்கள். அரசாங்க ஒழுங்குகள் எல்லாம் தனிச் சிங்களச்சட்டத்திற்கமைதல் வேண்டும் என்று சத்தியமும் சபதமும் செய்திருக்கும் அமைச்சர்கள் அதிகாரிகள் நாளுக்குநாள் தமிழ் பேசும் மக்களுக்கு அவமதிப்பையும் அல்லலையும் கொண்டு வரும் வகையில் நடைமுறைகளை வகுத்து வருத்தப்படுத்த, பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் (தமிழர்) முதல்அமைச்சரிடம் முறையிட வேண்டியிருப்பதும் 'தயவு காட்டச் சித்தங் கொண்டேன்' என்று பிரதமர் மனமிளகுவதும் சனநாயக ஆட்சி முறைக்கு முற்றிலும் மாறுவதுமன்றித் தமிழ்ப் பேசும் மக்களின் மானத்துக்குப் பங்கமாவதும் ஆகும்.

கிராமச் சங்க மாநாட்டிலே முதல் அமைச்சர் அரசியல் நிலைமையை விளக்கியிருப்பதை நுட்பமாக ஆராய்ந்து நோக்குமிடத்துத் தமிழ்மொழிக்கு

# தனிப்பெருந் தமிழுக்கு இந்தியாவிலிடமில்லையா!

## அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரை

நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை அரசியல் தமிழில் நடைபெற வேண்டும். தமிழிலேதான் நடைபெறும். நம்முடைய அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் இதை ஏற்றுக் கொண்டுவிட்டது. நாம் வேகமாகச் செல்லவேண்டும். இப்போது தமிழை ஆட்சி மொழியாக்கி விட்டால் வேறு எந்த மொழியாவது வந்து விடுமோ என்ற எண்ணம் நமக்கு ஏற்பட்டுவிட்டது. மாகாண மொழிதான் பாடமொழியாகவும் அரசியல் மொழியாகவும் இருக்க வேண்டும். 10-வது வகுப்பிற்குமேலும் தமிழிற்றுன் பாடங்கள் நடைபெற வேண்டும். இதை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பின்பற்ற வேண்டும். இதைப் பின்பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகமும் செயலாற்றும். மாணவர்கள்தான் இதில் உறுதியாக இருக்க வேண்டும். ஆங்கிலமும் வட்டாரமொழியும் முதலில் பாட மொழியாக இருக்கட்டும். மாணவர்கள் எதை அதிகமாக ஏற்றுக்கொள்கிறூர்கள் என்று பார்த்துப் பின் அதைப் பின்பற்றலாம்'

வடநாட்டினருக்கு நமது வளர்ச்சி ஒருசிறிதும் தெரிவதில்லை. அவர்கள் தென்னுடு என்று ஒன்று இருக்கிறது என்பதையே மறந்து விட்டார்கள். தென்டில் சிறந்த கவிஞர்கள் இருந்திருக்கிறூர்கள். இப்போதும் இருக்கிறூர்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. ஒருதகரத்துள் தண்ணீரை விட்டுக் குலுக்கினல் எந்த ஓசை வருமோ அந்த ஒலிதான் தமிழினுடையது என்று ஒரு வடநாட்டான் எழுதியிருக்கிறுன். ஆனல் வடநாட்டிலிருந்து தென்னுட்டிற்கு வரும் பெரும் தலைவர்களிலிருந்து சிறிய தலைவர்கள் வரை வடநாடும் தென்னுடும் ஒன்றுதான் என்று கூறத் தவறுவதில்லை. வடநாட்டு மொழி என்றும் தென்னுட்டு மொழி என்றும் தொன்று தொட்டே இருந்து வந்திருக்கிறது. இது அவர்கள் அறிவுக்குப் புலனுவதில்லை வடநாட்டாரின் வெறியைக் கண்டு, நமது நெறியும் வெறியாகிவிடுமோ என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் நன்கு உணர வேண்டும்.

அரசியற்றிட்டத்தை 14 மொழிகளிலும் மொழி பெயர்ப்பதற்கும் சில பதங்களுக்கு ஏற்ற சொல்லை எந்த மொழியில் இருந்தாலும் எடுத்துக் கொள்வதற்கும் தெல்கியில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. தமிழ் மொழியின் சார்பாக நான் சென்றேன். இந்தக் கூட்டத்தில்தென்பகுதி மொழிகளின் சார்பாக சென்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. 'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்'என்று நானும் பேசாமல் இருந்தேன். 'டேக்ஸ் அஸ்ஸெஸ்ஸ் டெண்ட் டியூடி கஸ்டம்ஸ்' ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற இந்திமொழிச் சொற்கள் தேவைப்பட்டன. இந்தி மொழிக்காரர்களைப் பார்த்து இதற்கு ஏற்ற சொற்களைக் கூறும்படி தலைவர் கேட்டார். அவர்கள் இந்த நான்கு சொற்களுக்கும் 'சூர்க்கா' என்ற ஒரே ஒரு சொல்லைத் திரும்பத் திரும்பச் சொன்னூர்கள். இதைத் தலைவர் விரும்பவில்லை. இந்தி மொழி எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையும் கிடையாது இந்தியில் ஏற்ற சொற்கள் இல்லையென்று கூறியபோது என் மனம் விரிந்தது. இறுதியில் தலைவர் தென் திசையைப் பார்த்தார். திராவிடத்தை நோக்கினூர் திராவிட மொழியின் சார்பாக வந்திருந்தவர்களை) இவைகளுக்கு ஏற்ற சொற்கள் தமிழ்மொழியில் இருக்கின்றன. ஆனல் நீங்கள் ஏற்றுக்கொளளமாட்டீர்கள். இருப்பினும கூறுகிறேன் என்று சொல்லி 'டேக்ஸ் வரி டியூடி கடமை கஸ்டம்ஸ் சுங்கம் அஸ்ஸெஸ்மெண்ட் தீர்வை' என்று கூறினூர்.

ஆனல், அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளாமல் இன்னும் இந்தச் சொற்களுக்கு 'சூர்க்கா' போட்டுககொண்டே இருக்கிறூர்கள். இவர்களா இந்தியாவை ஆளப்போகிறூர்கள்?தென்னுடு மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய செவியினர் அங்கு இல்லை. தென்னுடு என்ருல் புறக்கணிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது. இது போன்ற பல [illegible] சொற்[illegible] ஆனல் ஏற்ற தமிழ்ச் சொற்களை நான் கூறியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை வடநாட்டவர் இங்கே வரும்போது இந்தியா ஒரே நாடு என்று கூறுவதை நாம் ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும்? ஆங்கிலம் வேண்டாம் என்கிறூர்கள். உருதுச் சொற்களும் கூடாது என்கிறூர்கள். இந்தி ஒன்றைமட்டும் வைத்துக்கொண்டு இந்தியாவை ஆள நினைக்கிறூர்கள். நான் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதாக நினைக்கவேண்டாம். அவர்கள் வெறியைக் கணடு உள்ளம் கொதித்துத்தான் இவைகளைக் கூறுகிறேன். நம் வெறியை அவர்கள் தெரிந்து கொள்ளும் வரையில் நாம் அவர்கள் மொழியை ஏற்றுக் கொளள முடியாது"

—0—

ஒருவிதஉரிமையும் இராதென்றே எண்ணுதல் வேண்டும். சமஉரிமை அரியாசன வரிசை என்பனவற்றைப்பற்றி நினைக்கவும் முடியுமா? நீதி மன்றங்களிலே சிங்களம் ஆட்சி மொழியாக்கப்படுவதற்கு வழி வகுக்கின்றூர் அப்பகுதி அமைச்சர். இந்த விதமாகத் தோலிருக்கச் சுளைவாங்கும் அரசியற் றந்திரத்தை தமிழ்பேசும் மக்கள் நன்கு அறிவார்கள் என்ற உண்மையைத் திரு. பண்டாரநாயக அறியா[illegible] போலச் சமரசம் பேச[illegible] அதிசயமாக இருக்கின்றது.

பாரத நாட்டின்

# பண்புமிக்க சால்பு

காந்தி மகாத்மாவின் பின் பாரதநாட்டில் காந்திக் கொள்கை நின்று நிலவுமா என்று அரசியல் ஆராய்ச்சியாளர்கள் யாராவது ஐயமுற்றிருந்தால் இந்நாட்டின் எட்டாவது குடியரசுத் தினக் கொண்டாட்டம் அந்த எண்ணத்தை அகற்றியிருக்கும் என்பதிற்கையமின்று. காஸ்மீரத்திலே கோவாவிலே நிகழ்கின்றபுறநாட்டுநெருக்கடிகளில் ஒரு புறமாகவும் கேரளத்தில ஆட்சி முறை வேற்றுமை, தென்னுடு வடநாடு என்று பிரிவினையைப் புகுத்தும் அரச வரிசைக் கொள்கை முதலியன மறுபுறமாகவும் இருந்து அரசியற் கொந்தளிப்பையுண்டுபண்ணியும் பாரதநாடு பழம் பண்பாட்டிலேயே வளர்ந்து வருகின்றது. இந்திய தேயத்துக்கு மட்டுமன்று இலங்கை முதலிய ஏனைய ஆசிய நாடுகளுக்கும் சுயஆட்சி முறையைக் கொணர்வித்த 'அரசியல் மனமாற்றம்' காந்திப் பெரியாரின் அறவழி அரசியற் கொள்கையின் பேறுகவமைந்த தென்பதுதான் இக்கால வரலாற்றின் பேருண்மையான நிகழ்ச்சி.

உணர்ச்சிக்கு உதவியாயிருக்கும் இந்த வாரத்துக்குப் பாரதப் பண்பாட்டைப் பிரதிவிம்பித்து பாரெங்கும் பாரதப் புகழைப் பரப்பும் கலாநிதி ச. இராதாகிருஷ்ணன் அவர்களின் வருகை மிகமிகப் பொருத்தமானதே.

## வண்ணை ஸ்ரீ வெங்கடேசுவரப் பெருமாள் கோயில்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் தேர்த்திருப்பணி திருவிடைமருதூர் ஸ்ரீசீ சுப்பிரமணிய ஸ்தபதி அவர்களின் மேற் பார்வையில் இந்தியா ஆசாரிமாராலும் உள்ளூர் ஆசாரிமாராலும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த விஷயம். சில மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணம் ஐக்கிய இலாப நிதிச் சிறுப்பர் திரு. K. கனகசபை அவர்கள் அத்தேர்த் திருப்பணி வேலையைத் தொடங்கிவைத்தனரென்பதையும் நேயர்கள் அறிவார்கள். சென்ற திங்கட்கிழமை சூரியோதயத்தில் பிரபல கணக்குப் பரிசோதகர் திரு. கு சச்சிதானந்தம் அவர்கள் அத்தேரின் பார்ப்பிரதிஷ்டையை அதற்குரிய சடங்குகளுடன் செய்துவைத்தனர். அக்கிரியைகளுக்கு'அதன் பின் பெருமாளுக்கு நடந்த விசேஷ பூசைக்கும் அநேக பக்தர்கள் சமுகமளித்திருந்தனர். இல்வளவு காலமும் பகுதி பகுதியாகச் செய்யப்பட்டிருந்த தேரின் பாகங்கள் சிற்பஅமைதி வாய்ந்த விக்கிரகங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. குறித்த வைபவத்தின் பின் அவை மெல்ல மெல்லத் தேரில் உரிய இடங்களில் வைக்கப்பெற்றுக் காட்சியளிக்கும். விஷ்ணுவின் தசாவதாரம், கிருஷ்ணனின்லீலைகள், ஸ்தல விருட்சம் பூதகணங்களின் சங்கீத நாட்டியம் ஆதியனவற்றை இவ்விக்கிரகங்கள் குறிக்கின்றன. இதுவரை தேரின் 40 வீத வேலை முடிந்திருக்கிறதாகக் குறித்த கோயில் மனேஜர் திரு. சி. பொ. செல்லையா அவர்கள் அறிவிக்கின்றனர்.

———

## திருமணம்

———

**நவரத்தினம் — புஷ்பராணி**

அளவெட்டி தெற்கு திரு. V. K. துரையப்பா அவர்களின் புத்திரனும் கொழும்பு தபால் நிலைய உதவி அதிபருமாகிய திருவளர்செல்வன் நவரத்தினமவர்களுக்கும் மல்லாகத்தைச் சேர்ந்த குளமண்கால், திரு. S. தம்பிப்பிள்ளை அவர்களின் புத்திரி திருவளர்செல்வி புஷ்பராணிக்கும் சைவமுறைப்படி மணமகளில்லத்தில் தைமீ 11ந வ (24-1-58 வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் பெருந்திரளான சுற்றமித்திரர் சமுகத்தில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் சகல ஐஸ்வரியங்களையும் இறைவன் அருளாற் பெற்றுவாழ்வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பூசம் (3-2-58)

# முருகன் திருப்பொன்னூசல்

—:0:—

[ இசைப்புலவர் சி. செல்லத்துரை ]

சீரார் பவளங்கால் முத்தங் கயிறுக
ஏராரும் பொற்பலகை ஏறி யினிதமர்ந்து
சேரா நிருதர்குலந் தேய்நதொழிந்து தேவர்குலம்
பேராள வைத்த பெருமான் முருகனனும
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர்! பொன்னூச லாடாமோ.

x x x

தேவர்க் கிடர்செய்யத் தேர்ந்தெழுந்த சூரன்தன்
ஆவி தனையகற்ற அருஞ்சம ரம்புரிந்தோன்
தாவில் கருணைவெள்ளம் தங்கினேன் தொண்டர்தம்
பாவ வினைதுரந்து பண்பார் நெறியளிக்கும்
காவடி வேலன் களிக்கும் படிபாடிப்
பூவடி மங்கைநல்லீர்! பொன்னூச லாடாமோ.

x x x

மங்கையுமை பங்கனிலே வன்னுமெரி நேத்திரத்தில்
பொங்கி யெழும்பொறிகள் பொய்கை சாவணத்தில்
தங்கிவிழ மாதர்கள் தாவி மகிழ்ந்தெடுத்துச்
சங்கைபெறு மோர்வடிங் தாங்க வளர்த்தெடுத்த
துங்கமுயர் கந்தன்தன் தூய புகழ்பாடி
பொங்குலவு பூண்முலையீர்! பொன்னூச லாடாமோ.

x x x

இந்திரனும் பங்கயனும் எண்ணில் இமையவரும்
எண்டிசையின் பாலகரும் எண்ணி யிறைஞ்சிடவே
சந்ததமும் நல்வரங்கள் சார்ந்து கொடுத்தருள
வந்தருளும் வேலன்தன் வல்ல புகழ்பாடி
இந்த வுலகத்தில் இனிதிருக்கச் சேயிழையீர்!
புந்தி மிகமகிழ்ந்து பொன்னூச லாடாமோ.

x x x

சேவற் கொடியானைச் செந்தில்வே லாயுதனைத்
தேவக் களிற்றம்மை தேர்ந்தெடுத்த நாயகனை
மேவுந் தினைப்புனஞ்சேர் மெல்லியலின் காதலனை
கோவின் குலம்பேணுங் கொண்டல் மருமகனை
தாவுமயில் வாகனனைத் தந்திமுகன் தம்பிதனைப்
பூவையார்காள்! நாம்பாடிப் பொன்னூச லாடமோ!!

x x x

தாரா கணமென்னுந் தாய்மார் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப்பால் ஆர்வமா யுண்டவனை
சீராருங் கையிற் சிறுவாளும் வேலுங்கொண் (டு)
ஓரார் தமைபெலாம் ஓட்டும் வலியுடைய
பேரார் முருகன் பெரும்புகழை நாம்பாடி
பூரித் தகங்குழைந்து பொன்னூச லாடமோ!

x x x

அரைவடமுந் தண்டை யழகான கிண்கிணியும்
திருமுகங்க ளாறுஞ் செறிந்தபன் னிர்கரமும்
மருவுஞ் செவிதனிலே மன்னுபெருங் குண்டலமும்
உருள்பூந் தண்தார்சேர் உரமும் மிகவிளங்கும்
கரையில் கருணைக் கதிர்வேலன் சீர்பாடிப்
புரைதவிர்ந்த மங்கைநல்லீர்! பொன்னூச லாடாமோ!!

x x x

குன்ற மெறிந்தவனைக் குன்றப்போர் செய்தவனை
மன்றில் நடமிடுவோன் மைந்தனாய் வந்தவனை
அன்றொருநாள் நக்கீரன் துன்பந் துரந்தவனை
நன்றொருகால் நாம்நினைக்க நன்மைபல செய்பவனை
என்றும் மறவாமல் ஏந்திழையீர்! ஈங்கவன்தன்
பொன்றுப் புகழ்பாடிப் பொன்னூச லாடாமோ.

x x x

தேவர் குலம்பேணத் திருப்பாற் கடல்கடைந்து
பூவுலகந் தன்னைப் புதுமைபெ றப்புரந்து
ஆவின்குலம் பேணி ஆயர்க் குதவிசெய்து
தேவி இலக்குமியை மார்பி லுறையவைத்து
மேவுந் திருமால் மருகனை நாம்பாடி
பூவிற் பொலிகுழலீர்! பொன்னூச லாடாமோ.

x x x

பன்னுந் திருச்செந்தூர் பழனி பரங்குன்றம்
மன்னுந் திருத்தணிகை மாசில் கழுகுமலை
துன்னுங் கயிலைமலை சுவாமிமலை செங்கோடு
[illegible] திகழுங் கதிரைமலை
[illegible] சாரந்தோன் புகழ்பாடி
பொன்னொத்த பூண்முலையீர்! பொன்னூச லாடாமோ.

# செந்தமிழ்ச்சிறுவர் கல்விச்செல்வம்

———0—0———

"அங்கனுல கனைத்தினையும் ஆடரங்கம் எனலாகும், அவனி வாழும், மங்தகயரை ஆடவரை நடம்புரியும் மக்களென மதித்தல் வேண்டும்" எனப் புகன்றனர் ஆங்கில மகாகவியாகிய செகசிற்பியார் (ஷேகஸ்பியர்). பூமிசாஸ்திரத்தையும் இதிகாசத்தையும், அரங்கும் நாடகமும் எனக் கூறுவர் கல்வி முறை நூல் வல்லோர். இதிகாசமே வாழ்க்கைப் பண்பாட்டிற்கு உயிர்போல் இருப்பது. இச் சிறப்பு வாய்ந்த வரலாற்றுப் பாடம் படிப்பித்தற்குத் துணையான சில குறிப்புக்களை முத்தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் கட்டுரை ஒன்றிற் கூறியுள்ளார்கள். ஆசிரியர்க்குப் பயன்படுமாறு அப்பகுதி இங்கு தரப்படுகின்றது.

"நமது பண்டை நாட்சிறப்பை நமது செல்வக் குழந்தைகளுக்குப் போதித்து வைத்தல் வேண்டும். குமரி முதல் இமயம் வரையிலுமுள்ள நாடனைத்தினையும் வென்று மணிமுடி சூடி ஆழிவேந்தனாக அரசு புரிந்த சோழன் கரிகாற்பெருவளத்தானது திருவளத்தைத் தமிழ்நாட்டுச் சிறுவரனைவரும் அறிதல் வேண்டும்; அண்டினர்க்கன்பனாய் மாங்குடி மருதனாரியற்றிய தீஞ்சுவை மதுரைக் காஞ்சிக்குத் தலைவனாக விளங்கிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது பெருஞ்சிறப்பினை நம் செல்வச் சிறுவர்களறிதல்வேண்டும்; பாரதப்போர் நடந்தகாலத்தில் பாண்டவர் துரியோதனாதியோர் என்னும் இருவகையார் சேனைக்கும் பெருக வுணவளித்த உதியன் சேரலாதனது பதியுந் தமிழ் நாடே யென்னுமுண்மையினை நம்பாலியர்க்குச் சொல்லிவைக்க வேண்டும். மீனக்கொடியும் விற்கொடியும் புலிக்கொடியும் பறக்கக் கானப்பேரெயிலகத்தும், காரியாற்றினும், தகடூரினும் பொருது புறங்காட்டாது வீழ்ந்த பெருமக்களுக்குரிய நாடு இந்தத் தமிழ்நாடு என்பதை நமது தவமைந்தர் அறிதல் வேண்டும்.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்று நாயனார் புகழ்ந்துரைத்தது நமது தமிழ் நாட்டு வீரரையென்பதை நமது தெய்வக் குழந்தைகளுக்கு நினைப்பூட்டி வைக்கவேண்டும். தமிழ் நாட்டிலிருந்த ஒரு வீரத்தாய் தனது மைந்தனைப்பற்றிச் சொல்லுகிற ஒரு உறுதியுரையைச் சற்றுச் செவிசாய்த்துக் கேட்போமாக.

"ஈன்று புறந்தருத
லென்தலைக் கடனே
சான்றோ னாக்குதல்
தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல்
வேந்தற்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம
முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே"

பூதவுடம்பு அழிந்தொழிந்த பின்பும் நிலைபேறுடையதாக மன்னி நிற்கும் புகழுடம்பே தமது உண்மையுடலம் என அறிந்து அதனை வளர்த்தற்கு முயலுவது தெய்வத் தன்மை பொருந்தியவர்க்குரிய குணமாகும்.

தோன்றிற் புகழொடு
தோன்றுக வஃதிலார்
தோன்றலிற்
றோன்றாமை நன்று"

என்று நாயனர் உரைத்த பெருமந்திரத்தைக் காலையினும் மாலையினுஞ் செபித்து வருமாறு நமது செல்வச் சிறுவர்க்குச் சொல்லி வைத்தல் வேண்டும்.

"பயம்" என்பது இன்னது என்று அறியாது இருந்த நெல்சனுடைய சரித்திரம்போன்ற சரித்திரங்களை நமது பாலியர்களறிந்திருக்க வேண்டும். நமது கண்ணின் மணி போன்ற சிறுவர்களுடைய கல்வி விஷயத்தில் நாம் இப்பொழுது எடுத்துக் கொள்ளுகிறசிரத்தையைப் போலப் பதின் மடங்கு அதிகமாகிய சிரத்தையுள்ளோமாய் அதற்காகவேண்டிய பொருளைச் செலவிடுவதிற் சிறிதும் பின்னில்லாதவர்களா யிருத்தல் வேண்டும். நாம் உயிர் வாழ்வது எதற்காகவென்று ஆராய்ந்து பார்ப்போமாயின் நமது ஆன்மலாபத்துக்காகவும் நமது அருமைச் சிறுவர்களை மேனிலையில் வைத்தற்குமே யென்பதை யறிந்து கொள்வோம். உண்மையறிவினைக் கொடுக்காது நமது சிறுவர்களுக்குப் பொருளினை மாத்திரந் திரட்டி வைத்துவிட்டுப் போவோமாயின் அப்பொருள் அவர்களுக்குத் தீமையை விளைக்குமேயன்றி ஒருவகை நன்மையையும் பயவாது. ஆதலால் சின்னஞ்சிறு வயதினராகச் சிற்றில் சிதைத்து விளையாடிக் கொண்டிருக்கிறகாலத்திலேயே நமது சிறுவர்க்கு நமது முன்னோரின் பெருமையை யுணர்த்தி வைக்க வேண்டும்.

"நான் தமிழன், தெய்வத் தமிழ் நாட்டிற் பிறந்தவன், எனது முன்னோர் மிகுந்த வீரம் படைத்தவர்கள், போரிற் புறங்காட்டாத் தீரம் மிகுந்தவர்கள், ஆண்மை குன்றா ஆற்றலுடையவர்கள், தோள் வலி படைத்த சுத்தவீரர், அவரது மரபிற் பிறந்த நான் எனது சாதியாரின் உயர்ச்சிக்காகமுயலுவேன், மிகப் பழமையான நாகரிகம் வாய்ந்த எனது சாதி ஏனைய சாதிகளினும் பார்க்க உயர்ந்ததேயன்றி ஒருவாற்றானுங் குறைந்ததல்ல, நான் தமிழன் தெய்வத்தமிழ்நாட்டிற் பிறந்தவன், அந்நாட்டின் உயர்ச்சிக்காக உழைப்பதற்கே நான் பிறந்திருக்கிறேன், கம்பனையொத்த கவிவாணரும், கரிகாற் பெருவளத்தானைப் போன்ற திருவாளரும், வரையாது கொடுக்கும் வள்ளல்களும் தோன்றிய சாதியெனது சாதி; அவரது புகழினைப் பெருக்குவேனேயன்றி ஒருபோதுங் குறைக்கமாட்டேன். தெய்வத் தமிழ் நாட்டிற்குரிய தெய்வமாகிய திருமுருகன் எனக்கு ஆண்மையையும், கல்வியையும் அறிவினையுந் தந்தருளுவாராக" என்று அநுதினமுந் துதித்து வரும்படி நமது தெய்வக் குழந்தைகளுக்குத் தெரிவிப்போமாக. (குமரன்)

—

# கல்விக் கதிர்

இந்துசாதனம் இந்துசமய அறிவை வளர்க்கும் வாரப் பத்திரிகை. ஆங்கிலத்திலும் இது வாரந்தோறும் வெளிவருகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெருமையினை விளக்கும் கலங்கரை விளக்கங்களுள் ஒன்றாக நிலவுவது. நாவலர் உள்ளக்கருத்தினின்றும் பிறந்த யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படுவது.

இப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களுள், கல்வி பற்றிய விஷயங்களைக் கொண்டது இந்துசாதனக் கல்விக கதிர். இஃது இருவாரத்திற்கொருமுறை வெளியிடப்படுவது; மாணவர்க்கும் ஆசிரியர்க்கும், கல்வித் துறையிலே தொண்டாற்றும் பிறர்க்கும் பெரிதும பயன்படும். 4 பக்கம் கொண்டது.

பத்துச்சத முத்திரை அனுப்புவோர்க்கு மாதிரிப் பிரதி அனுப்பப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார்

( முற்றொடர் )

திருவாரூரில் வேனில் விழாவில் பரவையார் நாட்டியம் ஆடுவது வழக்கம். சுந்தரர்க்கு ஆரூர்ப் பெருமான் விழாவைக் காணும் விருப்பம் உண்டாயிற்று. திருவாரூர் செல்லத் துணிந்தார். "எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே" என்று பாடிக்கொண்டு திருவாரூருக்குப் புறப்பட்டார். திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததும் உறுதிமொழியை மீறியதினால், கண் பார்வை இழந்தார். தாம் செய்த தவறுதலினால் இது நேர்ந்ததென்றெண்ணி ஏங்கினார்; கண் பார்வையைத் தருமாறு மனங் கரைந்துருகி வேண்டி,

"அழுக்கு மெய்கொடுன் திருவடி
யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன்
றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்
வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப்
பிழையேன்
வழுக்கிவீழினும் திருப்பெயர்
அல்லால்
மற்றுநான் அறியேன் மறு
மாற்றம்
ஒழுக்க என்கணுக்கொரு
மருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊர்உறை
வானே"

என்று பதிகம் பாடினார். உடன்வரும் அடியார் துணைகொண்டு திருமுல்லைவாயிலடைந்து பாடினார். திருவெண்பாக்கம் அடைந்து "திருக்கோயில் உள்ளீரே" என்று பாடினார். இறைவர் ஊன்றுகோலளித்து "உளோம் போகீர்" என்றருளினார்.

## இடக்கண் பெறுதல்

காஞ்சியடைந்து ஏகம்பப் பெருமானைப் போற்றிப் பதிகம் பாடினார். இறைவர் இரங்கி இடக்கண் பார்வை நல்கினார். சுந்தரர் மகிழ்ந்து "காலகாலனைக் கம்பன்எம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே" என்று பாடிப் பல பதிகளை வணங்கித் திருத்துருத்தியையடைந்தார். இறைவன் ஆணைப்படி அங்குள்ள திருக்குளத்தில் மூழ்கித் தம்முடலி லிருந்த நோய் நீங்கப்பெற்றுப் பதிகம் பாடி வணங்கினார்.

## வலக்கண் பெறுதல்

பின்னர்ப் பல பதிகளை வணங்கிக்கொண்டு திருவாரூர் அடைந்து பதிகம் பாடினார்.

"ஆளாயிருக்கும் அடியார்
தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர்
திருவாரூரார்
வாழ்ந்து போதீரே"

என்று பாடிப் போற்றினார். வான்மீகநாதர் மனமிரங்கி வலக்கண் பார்வையும் அருளினார். ஆரூரர் எல்லையற்ற மகிழ்ச்சியுற்றார்.

## பரமன்பரவையாரிடம் தூது செல்லுதல்

திருவொற்றியூரிலே ஆரூரர் சங்கிலியாரை மணந்து கொண்டதை யறிந்த பரவையார் அவரிடம் பிணக்குக்கொண்டிருந்தார். சுந்தரர் இறைவரிடம் விண்ணப்பித்தார். இறைவர் ஆதிசைவர்போல வேடங்கொண்டு பாதி இரவில் பரவையாரிடம் தூது சென்றார். பரவையார் இசைந்திலர். சுந்தரரிடம் இதைச் சென்றுகூற அவர் தாங்கள் கூறியும் அவள் இசையவில்லையாயின் நான் இனி உயிர் தரியேன்" என்றார். மறுபடி பரவையாரிடம் தூது சென்றபோது வந்தவர் இறைவரே என்பதறிந்த பரவையார் அஞ்சி வணங்கி இசைந்தார்; சுந்தரர் பரவையார் இல்லம் அடைந்தார்; பரவையார் அன்புடன் வரவேற்று மகிழ்ந்தார்.

## ஏயர்கோன் கலிக்காமர் நட்பு

திருமங்கலம் என்னும் பதியில் ஏயர் குடியிலே தோன்றிய சிவனடியார் கலிக்காமர் என்பவர், சுந்தரர் இறைவரைத் தூதனுப்பியதுபற்றிக் கேள்வியுற்றுக் "கடவுளைத் தூதனுப்பியன் ஒரு அடியவனா? இதைக்கேட்டும் நான் உயிர் தரித்திருக்கின்றேனே! அவனைக்காணின் உயிர் விடுவேன்" என்று கூறி மனம் வருந்தினார். இதைத் கேள்வியுற்ற சுந்தரர் தம் தவறுதலை உணர்ந்தார்; கலிக்காமருடன் நட்புக்கொள்ள விழைந்தார்; இறைவரிடம் முறையிட்டார்.

இறைவர், கலிக்காமருக்குச் சூலைநோய் உண்டாக்கிச் "சுந்தரனாலே இந்நோய் நீங்கும்" என்று அவர் கனவில் கூறினார். கலிக்காமர் "யாங்கள் வழிவழி தங்கள் அடியவர்கள். புதிய தொண்டன் வந்துதான் என்நோய் தீர்க்க வேண்டுமா? அவன் வந்து நோய் தீர்ப்பதை யான் விரும்பேன்" என்றார். இறைவர் ஆரூரர் கனவில் "கலிக்காமன் சூலையைச் சென்று நீக்குக" என்று கூறியருளினார் சுந்தரர்தம் வருகையைக் கலிக்காமர்க்குச் சொலலியனுப்பினார். "அவன் வருமுன் இச்சூலை நோயை வயிற்றோடு கிழித்து ஒழிப்பேன்' என்று தம் குத்துவாளினால் வயிற்றைக் கிழித்துக் கொண்டார். அவர் மனைவியாரும் உடனுயிர்விடத் துணிந்து சுந்தரர்வரும்போது யாரும் அழாதிருக்கச் செய்து அவரை எதிர்கொள்ள-ஏவலரை அனுப்பினார். சுந்தரர் தம் இல்லத்திற் கெழுந்தருளியபோது கலிக்காமர் மனைவியார் இன்னுரை கூறி வரவேற்றார். 'கலிக்காமரை நான காணவேண்டும்' என்று சுநதரர் கூறினார். அவர் துயில்வதாகக் கூறிச் சுந்தரரை அழைத்துச் சென்று காட்டினர். குடர் சரிந்து இறந்து கிடந்தவரைக் கண்டு அஞ்சியஞ்சிய சுந்தரர் தாமும் உயிர்விட நினைந்து உடைவாளை உருவினார். கலிக்காமர் உயிர்பெற்றெழுந்து சுந்தரர் கையைப்பற்றினார். இருவரும் வணங்கி நண்பராயினர். கலிக்காமர் சுந்தரருடன் திருவாரூரையடைந்து சிலநாட்கள் தங்கி மீண்டார்.

## சேரமான் பெருமாள் நட்பு

அக்காலத்தில் சேரநாட்டு அரசராயிருந்த சேரமான் பெருமாள் நாயனார், சிவபூசை செய்யும்போது நடராசர் சிலம்பொலி கேட்டு வந்தார். ஒருநாள் சிலம்பொலி கேளாமையால் உயிர்விட நினைத்து உடைவாளை உருவியபோது சிலம்பொலி கேட்டது. "பொன்னம்பலத்தில் சுந்தரன் வந்து பதிகம் பாடுதலால் அதைக் கேட்டிருந்தோம். அதனால சிலம்பொலி தாமதித்தது" என்று இறைவர் அருளினார். அதைக்கேட்ட சேரர் உடனே சுந்தரரைக் காண விரும்பிப் புறப்பட்டுத் தில்லையையடைந்து வணங்கிப் "பொன்வண்ணத்தந்தாதி" பாடித் திருவாரூர் சென்றார். ஆரூரரைக் கண்டு வணங்கினார். திருக்கோயிலிற் சென்று வழிபட்டுத் "திருமும்மணிக்கோவை பாடினார். பரவையார் திருமனையில் ஆரூரரும் அரசரும் ஒருங்கமர்ந்து விருந்துண்டனர். சுந்தரர்க்குச் "சேரமான் தோழர்" என்ற பெயர் விளங்கியது. சேரரும் ஆரூரரும் பாண்டிநாடு சென்றனர். பாண்டியன் மகளை மணந்து சோழ அரசன் அங்கிருந்தான். மூவேந்தரும் ஒருங்கு கூடி மகிழ்ந்தனர்.

(வரும்)

---

## பொன்மொழி

நேர்மை இன்றி, அலையும் மனத்தோடு நூறு ஆண்டுகள் வாழ்வதினும், தியானத்தோடு பொருந்திய நல் வாழ்க்கையை அமைக்கும் முயற்சியில் ஒரே ஒருநாள் வாழ்வது நல்லது.

மந்தமாக, அலையும் மனத்தோடு நூறு ஆண்டுகள் வாழ்வதினும், தியானம் செய்தும் ஞானம் பெற முயன்றும் ஒரே ஒருநாள் வாழ்வது நல்லது.

சோர்வும் சோம்பலும் உடையவராய் நூறு ஆண்டுகள்வாழ்வதினும், உறுதியான நன்முயற்சியைத் தொடங்குவதில் ஒரே ஒருநாள் வாழ்வது நல்லது

—சென்னை, உயர்திரு
ச. கந்தசாமி முதலியார்
மொழிபெயர்ப்பு

---

# கதிரவன் ஆற்றல்

கலைஞர் திருவாளர் எஸ். சுப்புரெட்டியார் M. A; B. Sc. L T. அவர்கள் 'தமிழ்நாடு' என்னும் தினவர்த்தமானியில் எழுதிய கட்டுரை விஞ்ஞான பாடம் பயிலுவோர்க்குப் பயன்படுமாறு தரப்படுகின்றது "விறகிற் றீயினன்" என்னும் விஞ்ஞான உண்மையினை விளக்குவது

## விஞ்ஞானம்

'ஒளிச் சேர்க்கை. (Photosynthesis) என்பது இயற்கையில் நடைபெறும் ஓர் அற்புத நிகழ்ச்சி தாவரங்கள் காற்றிலுள்ள கரியமில வாயுவையும் வேர்களின்மூலம் பெறும் நீரையும் உட்கொண்டு கதிரவன் ஒளிக்கதிர்களாகவும் வெப்பக் கதிர்களாகவும் உமிழும் ஆற்றலைத் துணைகொண்டு கார்ப்போஹைட்ரேட்டுகள் (Carbo hydrates) பிசிதங்கள் (Proteins) கொழுப்புக்கள் (Fats) போன்ற பொருள்களைச் சேமித்து வைக்கும் நிகழ்ச்சியைத் தாவரநூலார் 'ஒளிச் சேர்க்கை' என்று வழங்குவர். தாவரங்கள் கதிரவன் ஒளிகொண்டே வாழ்கின்றன என்பதை யாரும் அறிவர். அவை கதிரவனிடமிருந்தே ஒளியையும் சூட்டையும் (ஆற்றல்-energy) நேரே விழுங்குகின்றன. இந்த உலகில் தாவரங்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் கதிரவனிடமிருந்து நேரடியாக ஆற்றலைப் பெறும் திறன் பெறவில்லை. மனிதன் உட்பட விலங்கு, பறவை முதலிய பிராணிகள் யாவும் நேராகக் கதிரவன் காலும் சூட்டையும் ஒளியையும் விழுங்காமல் அவற்றை விழுங்கிய தாவரங்களை விழுங்கிக் கதிரவன் ஆற்றலைப் பெறுகின்றன. புலி, சிங்கம் போன்ற புலாலுண்ணும் விலங்குகளோ சூரிய ஆற்றலை நேரே விழுங்குவதுமில்லை; தாவரங்கள் உண்டாக்கும் பொருள்களையும் விழுங்குவதில்லை. அவை பயிருண்ணும் விலங்குகளைக் கொன்று தின்கின்றன என்றாலும் அவற்றிற்கும் ஆற்றல கதிரவனிடமிருந்துதான் கிடைக்கிறது என்பது இச்சங்கிலித் தொடர் நிகழ்ச்சிகளால் அறியக்கிடக்கின்றதன்றோ? எனவே இப்புவியிலுள்ள உயிர்வாழ் பிராணிகள் அனைத்தும் பகலோனிடமிருந்த ஆற்றலைப் பெறுகின்றன என்பதை வெள்ளிடை மலையென அறிகின்றோம்.

நாம் உண்ணும் உணவு வேதி இயல் மாற்றம் (Chemical change) பெற்றுக் குருதியில் கலப்பது போலவே, கதிரவனின் ஆற்றலும் தாவரங்களின் ஒவ்வோர் அணுவிலும் அடங்கிக் கிடக்கின்றது. மண்ணிலிருந்தும் காற்றிலிருந்தும் உட்கொள்ளும் பொருள்களைக் கொண்டு தாவரங்கள் தம் உறுப்புக்களின் அணுத் திரள்களை (molecules) அமைத்துக் கொள்ளக் கதிரவனின் ஆற்றல் தேவைப்படுகின்றது. அதுபற்றியே தாவரங்கள் கதிரவனின் ஆற்றலை உட்கொள்ளுகின்றன.

பாரதியார் 'ஞாயிறுவணக்கத்தில் இந்த அறிவியற் கருத்து கவிஞனின் கற்பனையுடன் கலந்து புதுமெருகுடன் வெளிவந்திருப்பது பன்முறை படித்துச் சுவைக்கத் தக்கது.

காதல் கொண்டனை
போலும் மண்மீதே
கண்பிறழ் வின்றி
நோக்குகின்றாயே!
மாதர்ப் பூமியும்
நினமிசைக் காதல்
மண்டினாள் இதில்
ஐயமொன் றில்லை;
சோதிகண்டு முகத்தில்
இவட்கே
தோன்றுகின்ற
புதுநகையென்னே!
ஆதித் தாய்தந்தை
நீவிர் உமக்கே
ஆயிரம்தரம் அஞ்சலி
செய்வேன்

என்பது பாரதியாரின் சொல்லோவியம். கதிரவன் என்னும் காதலன் தன் காதலியாகிய நிலமகளைக் கண் இமைக்காது நோக்குகிறான், மண்மகளுக்கும் கதிரவன் மீது காதல் மண்டுகிறது. அவளும் 'பச்சைப் பசேலெனப் பெருங் காட்சியளிக்கும் பொழில்களின் அழகும், அவைகளில் பச்சைப் பரம்பெனப் பின்னிக்கிடக்கும் பசுங்கொடிகளின் அழகும், அவைகளினின்றும் அருமபியுள்ள நகை மலரின் அழகும், பொதுளப் பூரித்துப் புன்முறுவல காட்டி நிற்கின்றாள். ஆதித் தாய் தந்தையர்களாகிய இவர்களுடைய காதலின விளைவுதான் உழவர்களின வளம். கவிஞனின் நீண்ட கற்பனைப் பார்வையில அறிவியலறிஞனின் ஆழ்ந்த பார்வையும் கலந்து மிளிர்வதைக் கண்டு மகிழ்க.

---


## முத்திசாதன முறை

இது
கர்மயோகம், பக்தியோகம்,
இராஜயோகம், ஞானயோகம்
என்பனவற்றைத்
தெளிவாக விளக்குவது
20 அத்தியாயம்,
264 பக்கம்.

விலை ரூபா 1/=

அதிபர் :
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

## புத்தக விளம்பரம்

கட்டுரைக் களஞ்சியம்
விலை ரூபா 1-50

சிறுபிள்ளைப்பாடம்
விலை சதம் 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

புன்னாலைக்கட்டுவன்
பொன்னம்பலம் கைம்பெண்
சின்னம்மா - வழக்காளி.

வழக்கு இல M B 1315
எதிராக

ஏழாலை சுண்ணாகம்
1 வீரவாகு வயித்திலிங்கம்
2 வயித்திலிங்கம் இராசரத்தினம். - எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1315 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி. கட்டிடம், யந்திரங்கள் ஆகியன 1958-ம் வருஷம் மாசி மாதம் 27 திகதி (27-2-58) வியாழக் கிழமை காலை 10–30 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.


தீர்வைத் தொகை:- ரூபா 5266–67 சதமும், 6–11-56 தொடக்கம் 8-8-57 வரைக்கும் ரூபா 4000 க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 302-75 சதமும்.

காணி, கட்டிடம்,
யந்திரங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கேயிற்பற்று, ஏழாலை இறை 'குப்பிளான்' (Kuppilan) நிலப்பரப்பு 3 3/8ம் கட்டிடங்களும், கிணறும், பயிர்களும். இந்தக காணிக்குள் உள்ள கொறுகேட்ரட் சீற்றுகளையுடையதும் (corrugated sheets) பிரப்பந் தட்டிகளாலும், எக்ஸ்பான்டெட் மெட்ரலாலும் (expanded metal) அடைக்கப்பட்ட 35 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட கட்டிடத்திலுள்ளதுமான இயந்திர வகைகளும், ஒரு R. கோண்பி ஓயில் எஞ்சின் 1912 ரைப் 22–24 குதிரைப்பலம் இல: 48409 பிளோலாம்புடன் (one R. Hornbey Oil Engine 1912 type 22-24 B H. P. No. 48409 complete with blow lamp). றஸ்டன் அரிசி குத்தித் தீட்டும் யந்திரம்-போல் பேரிங் மொடல் (one Ruston Rice Huller and Polisher ball bearing model). ஒரு சென்ரிபியூகல் தண்ணீர் இறைக்கும் 1½ இஞ்சி வாட்டர் பம்ப் (one centrifugal water pump 1½ inches). இரண்டு சிப்டர்கள் (two sifters). ஒரு எண்ணைத் தகர ஸ்ராண்ட் (one oil barrel stand). ஒரு அவெரிமேடைத் தராசு 4 அந்தர் நிறுக்கக கூடிய படிக்கல்லுகளுடன் (one avery platform scale with weights to weigh 4 cwts). சாப்ரிங், பிளம்பர் புளக்குகள், புல்லிகள் பெல்ரிங்குகள் (Shafting, plumber blocks, pulleys and beltings). இதத்தனையும், ஆனால் நடுக்கட்டலின்போது எண்ணைத் தகர ஸ்ராண்டும், மேடைத் தராசும் அவ்விடத்தில் காணப்படவில்லை- எல்லை கிழக்கு றேட்டு. வடக்கு சின்னையா பெண் ஆசைப்பிள்ளையுடைய ஆதனம் மேற்கு அப்பா காசிப்பிள்ளைக்கும் கந்தவனம் பெண் மாணிக்கத்துக்குமுரிய ஆதனம். தெற்கு தம்பையா ஐயாத்துரையின் ஆதனம்.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர்.

(Commissioner of Sales)
மல்லாகம்,
23-1-58.
M 216. 31-1-



பாரத உபசனாதிபதி அவர்களுக்கு

# யாழ்நகரில் வரவேற்பு

——0——

## 5-2-58 ல் முற்றவெளியிற் சொற்பொழிவு

பாரதநாட்டின் உபசனாதிபதியும் உலகப் புகழ் வாய்ந்த தத்துவ ஞானியும் ஆகும் கலாநிதி ச. இராதாகிருஷ்ணனுக்கு யாழ்ப்பாண மாநகரசபையால் வரவேற்பு புதன்கிழமை மாசி 5ம் நாள் அளிக்கப்படுவதற்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. சபைத்தலைவர் திரு. பொ. காசிப்பிள்ளை இந்த ஒழுங்குகளைச் செய்து வருகின்றார்.

### சொற்பொழிவுக்கும் ஒழுங்கு

கீர்த்தி வாய்ந்த சொற்பொழிவாளர் என்ற புகழ் படைத்த கலாநிதி அவர்கள் குறிக்கப்பட்ட ஒரு பொருள்பற்றிச் சொற்பெருக்குவதற்கு ஒழுங்குகள் செய்தல் வேண்டுமென்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்பரன் கல்லூரியில் திரு. பொ. காசிப்பிள்ளையின் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது புதன் கிழமை மாலை 545க்கு இச் சொற்பொழிவுயாழ்ப்பாண முற்றவெளியில் முனியப்பர் கோயிலுக்கணித்தான மைதானத்தில் நடைபெறும். யாழ்ப்பாண் மாகாண அதிபதி திரு. ம. சிறீ காந்தாதலைமையில்ஒரு செயற்குழு இந்த ஒழுங்குகளைச் செய்கின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அனலைதீவு புளியந்தீவு நாகேசுவரன் கோயில் போட் மனேச்மென்ரின் தனாதிகாரனாகிய அனலைதீவு கனகசபை சரவணமுத்து
வழக்காளி
இல. M. B 1785
எதிராக
1 அனலைதீவு அம்பலவாணர் ஐயம்பிள்ளை
2 புங்குடுதீவு மேற்கு C. கார்த்திகேசுவும் பெண்
3 ஷெ சிவகாமிப்பிள்ளையும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 1785-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1958 ஹூ மாசி மீ 28 உ வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2760-ம் இதில் ரூபா 2000 கரு 14-8--57 திகதி தொடக்கம் 18–11–57 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 10 வீதவட்டியும் அதன் முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறை பெருக்கடி நிலப்பரப்பு 32-ம் கிணறும் எல்லை கிழக்கு செல்லையா பெண் சின்னம்மாவும் பங்காளரும், வடக்கு வேலுப்பிள்ளை குமாரசாமி மேற்கு பொன்னம்பலம் பெண் நாகம்மா தெற்கு முடிக்குரிய நிலம். இதடங்கலிற் சொரியலாய் (9/17 பதினேழில் ஒன்பது பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
22–1–58
M 214 31-1-58

## மகா சிவராத்திரியை விடுமுறையாக்குக

கொழும்பு இந்து வாலிபர் சங்கம் தைமாதம் ஆறும்திகதி 19-1-58 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அதன் பொதுக்கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

"சைவசமயிகளின் மிகப் பிரதான விரத தினமாகிய மகாசிவராத்திரி வெகு அண்மையில் வருகிற படியினால் ஏற்கனவே கனம் பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் அளித்த வாக்குறுதியின்படி, இதற்கு அடுத்த தினமாகிய மாசிமாதம் 6-ந் திகதியை (17-2-58) அரசாங்க வங்கி விடுமுறையாகப் பிரகடனம் செய்யும் வண்ணம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதுடன் இத்தகைய தீர்மானங்களை உடனடியாக அனுப்புவதன் மூலம் இத்தினத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கத்துக்கு உணர்த்தும் வண்ணம் சகல இந்து மத ஸ்தாபனங்களையும் மிகப்பணிவுடன் வேண்டிக் கொள்கின்றது".

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 2—2—58—— 8—2—58. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

சொந்த அலுவற் சிக்கல்கள் தீர்ந்துவிடும். தேக சுகமும் சீரடையும், புது முயற்சிகளில் முன்னேற்றம் வரும். ஆனல் ஆரம்பத்திற் சில தடைகள் தோற்றும்,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

பணவில்லங்கட் ஏற்படக்கூடும். சுலபமாகத் தீர்க்க முடியாத சில சிக்கல்கள் உண்டாகும். குடும்பத் தொல்லைகள் காணப்படும். வார இறுதியிலே நண்பர்களும் உதவிக்கு வருவார்கள்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

தடைகளை விலக்கக்கூடியதாயிருக்கும். பண இலாபமும் எதிர்பார்க்கப்படலாம். குடும்பச் சூழலில் எல்லாம் வில்லங்கமாயிருக்கும். தேகநலமும் அவ்வளவு திருப்தியாயிருக்காது.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

சொந்த அலுவல்களில் அதிக முன்னேற்றம் காணப்படும் நண்பர்கள் மிகவும் உதவியாயிருப்பார்கள். எதிரிகளை வெற்றி கொள்வதையும் வீர முயற்சியில் அநுகூலத்தையும் எதிர்பார்க்கலாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.

இன்னுங் கொஞ்சக் காலத்துக்குக் பணத் தொல்லைகள் தொடர்ந்து வரும். சுற்றத்தவருடன் சச்சரவும் காணப்படும், உடம்பு நிலை திருப்திகரமாயிருக்கவேமாட்டாது. தாய்வழிச் சுற்றத்தாருடன் பிணக்குகளுக்குமிடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நல்லவாரம், எல்லா முயற்சிகளிலும் நயம் உண்டு, எதிரிகள் தோல்வியடைவர், புகழ் எதிர்பார்க்கப்படலாம், ஆனற் குடும்பச் சூழலில் எல்லாம் நன்மையாயிருகக முடியாது.

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

முற்பகுதியில் குடும்பச்சூழலிற் சச்சரவுகள் ஏற்படலாம். தேக சுகம் அவ்வளவு திருப்தியாயிருக்கமாட்டாது. பிற்பகுதியில் நிலைமை சீரடையும். நண்பர்கள் மிகவும் உதவியாயிருப்பார்கள். காணிகள்மூலம் இலாபம் எதிர்பார்க்கப்படலாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேகநிலையிலே தளப்பங்கள் காணப்படும். செலவுப் பாரம் அதிகரிக்கும். சகோதரங்கள் உதவிசெய்து கஷ்டத்தை நீக்குவார்கள். வார நடுப் பகுதியில் எதிர்ப்புக் குலைந்துவிடும். ஞாயிற்றுக்கிழமையைக் கவனமாய்க் கழிக்கவும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

நல்லவாரம். ஆனற் புதுப் பொறுப்புக்களை ஏற்க வேண்டி வரும். கூடுதலாக வேலை செய்ய வேண்டி வந்தாலும் பண இலாபம் எதிர்பார்க்கப்படலாம் கொஞ்சக் காலத்துக்கு உடம்பைப்பேணி நடக்க வேண்டும். வயிற்றுக் கோளாறுகளுக் கிடமுண்டு. திங்களும் செவ்வாயும் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடும்

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

இவ்வாரம் நன்மைதரும். காரியங்களைச் சுலபமாகக் கொண்டு நடத்த முடியும். முன் முதலிட்ட கருமங்கள் நற்பயனளிக்கும். ஆனல் உடற்புநிலை மிகவும் திருப்திகரமற்றதாயிருக்கும். கண் வருத்தத்தைத் தரக்கூடும். புதனும் வியாழமும் ஒருசிறிது தளப்பத்தை உண்டாக்கலாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தந்தை வழிச் சுற்றத்தவர்கள் மிகவும் உதவியாயிருப்பார்கள், எதிர்பாராத இலாபங்களும் புகழும் சமூக அநுகூலமும் எதிர்பார்க்கப்படலாம். ஒரு நீட்சியான நிலைபெறக்கூடிய நற்காலத்தை அனுபவிக்க இடமுண்டு சனியும் ஞாயிறும் கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

எதிர்ப்பிருந்தாலும் சொந்த அலுவல்களில் எண்ணியபடி நடந்துகொள்ளத் தக்கதாயிருக்கும். பணத்துறையில் நல்ல வாரம், வேலைப்பாரம் அதிகமாயிருக்கும்.


# ஜீ. வீ. ஈ. இலக்கியம்

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்

அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.

விலை சதம்: 50.

மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்
யாழ்ப்பாணம்

டிஸ்திறிக் கோட்டில்
1. கரம்பன் வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
2. ஷெயூர் பெண் எலிசபெத்
வழக்காளிகள்
எதிராக
இல M B 1649
கரம்பன் ஞானப்பிரகாசம் சின்னத்துரையின் ஆதனங்களின் பராபரிப்புக்காரன் சூசைப்பிள்ளை சவரிமுத்து
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1649ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1958 ம் ஹூ மாசி மீ 10 திகதி திங்கட்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- வட்டி முதல் ரூபா 996/75 ம் ரூபா 750/- க்கு 28-5-57 தொடககம் 2-9-57 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பனிறை "கோணுமுற்றம்' பர. நெ. இல. 8 5/6 வீடும் தலைவாசலும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சூசைப்பிள்ளை பெண் எலிசபெத்துக்குரியவாதனம். வடக்கு மனவல் பெண் சவிரியாச்சிக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள். மேற்கும்தெற்கும் வயித்தியாம்பிள்ளை சவரிமுத்துவிற்குரியவாதனம்.

காரைநகர்
1958ம் ஹூ தைமீ 2 ம் திகதி
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
M 213 31-1-58.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரன் கோயில் போட்மனேச்மென்றின் தனுதிகாரனுகிய அனலைதீவு கலாசபை சரவணமுத்து
இல M. B. 1782
வழக்காளி
எதிராக
1 அனலைதீவு சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளையும்
2 ஷெ பெண் சாமளவல்லியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M, B, 1782-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 19.8ம் ஹூ மாசி மீ 28 உ வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.


தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 4962-ம் இதில் ரூபா 3600 க்கு 8-8-57 திகதி தொடக்கம் 18-11-57 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 10 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறை அரசன் புலம்சாட்டி கிலப் பரப்பு (10) பத்தும் பனைகள் தென்னைகள் கேணியும் எல்லை கிழக்கு சின்னையர் கணேசஐயரும் மறுபேரும் வடக்கு சுப்பிரமணியம் நாகலிங்கமும் ஒழுங்கையும் மேற்கு முருகமூர்த்தி கோயிலுக்கும் வேலுப்பிள்ளை பெண் பத்தினிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு ஒழுங்கை இதில் குறித்தகேணிபொதுப் பாவிப்புக்காக நீக்கி மிகுதியடங்கலும்.

ஆ. ச. கந்தையா,
கொம்மிஷனர்
காரைநகர்.
19-1-58.
M 215 31-1-

ஸ்ரீ செண்பகவிநாயகர் துணை



காத்தோங் சிங்கப்பூர்

## அர்ச்சகர் தேவை

சிங்கப்பூர், சிலோன் ரோட்டிலிருக்கும் ஸ்ரீ செண்பகவிநாயகர் ஆலயத்திற்கு ஓர் தராதலம் பெற்ற குடும்பஸ்தராயுள்ள பிராமண அர்ச்சகர் தேவை.

அர்ச்சகருக்கு மாதாந்தச் சம்பளமாயுள்ள வெள்ளி அறுபத்தைந்தையுந் தவிர வசிப்பதற்கு இலவசவீடு, தண்ணீர், விளக்கு ஆகிய வசதிகளும் அளிக்கப்படும்.

இவைகளுடன், உபயங்களினுல் வரும் தெட்சணைகளும், புரோகித வருமானங்களும், ஆலய அர்ச்சனைப் பணங்களில் எண்பது சத விகிதமும் உண்டு. சிங்கப்பூர் பிரவேச அனுமதி ஒழுங்குஞ் செய்து கொடுக்கப்படும்.

சகல அந்தஸ்துமுடைய அர்ச்சகர் கீழ்க்காணும் விலாசத்திற்கு விபரமாகவும் தாமதமில்லாமலும் மனுச்செய்துகொள்ளவும்.

கௌ. காரியதரிசி
ஸ்ரீ செண்பகவிநாயகர் ஆலயம்
19, சிலோன் ரோட்டு
சிங்கப்பூர் 15

Hony. Secretary,
Sri Senpaga Vlnayagar Temple
No. 19, Ceylon Road Katong
Singapore.

M 209 24.1, 7.2

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 885
ஏரம்பு பாலசுப்பிரமணியம்
கொக்குவில் கிழக்கு
வழக்காளி.
எதிராக
1. சுவாமிநாதர் செல்லையா மானிப்பாய் இப்போ இருக்கும் இடம் மாத்தலை.
2. புவனேஸ்வரி தியாகராசா விக்ரோறியா ரேூட் மாத்தலை.
3. தம்பிராசா தியாகராசா, கொவாடென் பெற்ராலே, மாத்தலை. - எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 885 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958 ம் ஆண்டு பங்குனி மாதம் 1-ம் திகதி சனிககிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் (1 3-58) அந்தக்காணிக்குள்நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும். முதலும் வட்டியும் ரூபா 2580/- முதல் ரூபா 1500/- க்கும் தீர்வைத் திகதி 16-3-1956 தொடக்கம் 23-5-57 மட்டும் 9% வட்டியும் கோட்டுச் செலவு 166-75

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2580/-ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 100-க்கு 5 வீத வட்டியையும் இறுக்க வேண்டும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்கு டிவிசன் கோவிற்பற்று மானிப்பாய் 'சீமான் தோட்டம்'' "மாவடி தோட்டம்" என்னும் காணி 16 பரப்பும் 7½ குழியும் கிணறும் கிணற்றுப் பங்கும் செய்பயிர் வகைகளும் உண்டு, எல்லை கிழக்கு செல்லப்பா கதிரவேலுவின் ஆதனமும். எல்லை வடக்கு J. P நாகலிங்கமும் பங்காளரின் ஆதனமும். எல்லை மேற்கு செல்லப்பா கதிரவேலுவும், தய்யல் முத்துவும் சிவகாமிப்பிள்ளையின் ஆதனமும் எல்லை தெற்கு ஒழுங்கையும், செல்லப்பா கதிரவேலுவின் ஆதனமும். இது E 266/54 நம்பரில் பதியப்பட்டிருக்கிறது.

இ. கனகரேத்தினம்
Commissioner of Sales
R. Kanagaratnam
No. 35 Colombogam Rd.
Chundikuli
Jaffna, 20-12-57.
M, 211 31-1-58.

## சண்டேசுரநாயனுர் குருபூசை

நாள்: ஏவிளம்பி ஹூ தைமீ உருவ (7-2-58) வெள்ளிக்கிழமை.
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.
நிகழ்ச்சிகள்:
இரவு6½—7 கடவுளாராதனை தமிழ்மறையோதல்.
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்
இரவு 7—8 பிரசங்கம்
விஷயம்: 'சண்டேசுரநாயனுர்'
சொற்பொழிவாளர்:
சைவப் பிரசாரகர்
திரு. த குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்
சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக,
மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 30-1-58.

## அரசியல் அலை
=O=
1-ம் பக்கத் தொடர்ச்சி

மாற்றமில்லை. ஆட்சி முறையில் மாற்றமில்லை பின் இந்தப் பிரதேசசபை கொண்டுவரவிருக்கும் நன்மை என்னவென்று மக்கள் சந்தேகப்பட்டால் அதற்குப் பிரதமர் சொல்லும் ஆறுதல்மொழி ஒன்று; உள்ளூர் ஆட்சி முறையில் இப்பொழுது அந்த அந்த மாவட்டங்கள் பெறும் வசதிகளினும் பார்க்கச் சிறிது கூடுதலாக வசதிகளை அமைத்தல் என்பதே மலை படாதபாடுபட்டு மரியாதையுடன் எதிர்பார்க்கும்பேறு? —சில வசதிகளைச் செய்யும் பிரதேச சபை—; இந்தப் பேற்றை எப்பொழுது பெறலாம் என்றால் — கால எல்லையில்லாத எதிர் காலத்தில் என்க.

இந்த விதமாக எந்தப் பிணக்கைத்தான் தீர்க்க முடியாது? பேச்சிலே [illegible] தப் பெருங்கதை.

## குத்தகை விளம்பரம்
1958

யாழ்ப்பாணம் பெரிய (டிஸ்திறிக்)கோட்டு உத்தரவின்படி பின்னற் சொல்லப்பட்ட காணிகள் அதி உயர்ந்த கேள்விக்காரனுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

I 1. உடுவில் 'உடையார் கலட்டி' என்னும் காணி 18 பரப்பு எல்லாம் பனை.
2. சுன்னுகத்தில் 'அம்பனை' என்னும் காணி 2 1/2 பரப்பு பனை.
3. உடுவில் 'கோட்டைவயல்' 7 நெற்பரப்பு
4. உடுவில் 'கட்டுவயல்' 3 பரப்பு.
5, உடுவில் புங்கடிவயல் 5 1/4 பரப்பு

II இந்தக் குத்தகைகள் 3 வருஷத்துக்குத்தான் ஒரு முறையிற் கொடுக்கப்படும்.

III குத்தகை எடுக்க விரும்புவோர் ஒவ்வொரு காணிக்கும் புறம்பாக அல்லது எல்லாக காணிகளும் என்ன குத்தகை கொடுப்போமென்று மாசி மாதம் 20-ஆம் திகதிக்கு முன் கீழே கையொப்பமிட்ட 'சுப்பிறீம் கோட்டுப்' பிறக்கிருசி அவர்களுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

(கடைசிக் குத்தகைத் தவணை 20-2-58.)

(விண்ணப்பம் அனுப்புவோர் யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டு சக்கடத்தாருக்கு 1958 ஆ மாசி மீ 20 உ க்கு முன்னதாக அனுப்ப வேண்டும்)

சி. பாலசிங்கம்
பிறக்கிருசி
தங்கஸ்தான்,
இருபாலை கோப்பாய்.
M 208 24-1, 7-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 209
இளையதம்பி சிவரட்டினம்
கோப்பாய் தெற்கு
வழக்காளி,
எதிர்
1 சுல்தான் அப்புதுள் காதர் கபீப் மூகம்மதுவும் பெண்
2 மூகமது சுலிக்க உம்மா
3 சுல்தான்மொகிடீன் சாகிப் சுல்தான் அப்புதுல்காதரும்பெண்
4 மூகமது பத்தும்மாநாச்சியாவண் மேற்கு
எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 209 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 29-3-1958 ஹூ பங்குனிமீ 29 உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- ரூபா 8812-50 ரூபா: 7500-க்கு 3-5 55 ல் இருந்து 14-7-1955 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் கூடிய மொத்த தொகைக்கு டணம் கொடுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 261-68

காணி விபரம்

யாட்பாணம் வண்ணுர்பண்ணை மேற்கில் அயிலடி என்னும் காணி நீ இ. 1¼ புது கல்வீடும் கிணறும் மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும்
எல்லை கிழக்கு மொகமது லெவை காதர்சகிப்பின் ஆதனம்.
வடக்கு ரேூட்டு
மேற்கு ஒழுங்கை.
தெற்கு ஒழுங்கையும் பவாசவிப் செயினுபிள்ளை மரக்காயர் இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்
யாழ்ப்பாணம்
29-1-58.
M. 212 31-1-58


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்
Std 14


யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால்31-1-58 வெள்ளிககிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org